04175 - 236654 / 235295
SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)
Accredited with "B+" GRADE by NAAC
Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

10.03.2024

# சண்முகா கல்லூரியில்
# 19 ஆவது பட்டமளிப்பு விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் 19-ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக, வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் **ஜெ.செந்தில் வேல்முருகன்** அவர்கள் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார். இவ்விழாவிற்குக் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை தாங்கினார், செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** முன்னிலை வகித்தார், பொருளாளர் **எ.ஸ்ரீதர்,** அறக்கட்டளை உறுப்பினர்கள் மற்றும் கல்விப்புல முதன்மையர் **பேரா.அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார்.

இப்பட்டமளிப்பு விழாவில் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் **ஜெ.செந்தில் வேல்முருகன்** அவர்கள் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார்.

“தொலைநோக்குப் பார்வையுடன் தொடங்கப்பட்ட சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்வி எண்ணற்ற மாணவர்களுக்குக் கல்வியின் மூலம் வாழ்க்கையை வடிவமைக்கும் கருவியாக செயல்பட்டு வருகிறது. படிப்பு என்பது பட்டத்தைப் பெறுவது மட்டுமல்ல. அறிவுத்திறன், படைப்பாற்றல், தனிநபர் ஒழுக்கம், பொறுப்புள்ள குடிமக்கள் மற்றும் நாளைய தலைவர்களை உருவாக்குவதாகும். கல்வி என்பது ஒரு வாழ்நாள் பயணம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கற்றுக் கொண்ட பாடங்கள், உங்களுக்கு முன்னால் இருக்கும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளின் மூலம் வழி நடத்தும். எனவே ஆர்வமாகவும், இரக்கத்துடனும் இருங்கள். “கற்றலை ஒரு போதும் நிறுத்தாதீர்கள் எனவும் உங்களின் எதிர்காலம் சிறப்பாக அமையட்டும் என வாழ்த்திப் பேசினார்”.

**17** இளங்கலைத் துறைகள் மற்றும் **9** முதுகலைத் துறைகளைச் சார்ந்த **1696** மாணவ, மாணவியர் பட்டம் பெற்றனர். இதில் **7** மாணவர்கள் தங்கப்பதக்கமும், **45** மாணவர்கள் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலிலும் இடம்பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவ்விழாவில் பட்டம் பெற்ற மாணவர்கள், பெற்றோர்கள், விருந்தினர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் எனப் பலரும் திரளாகக் கலந்து கொண்டனர்.

10/3/24
செயலர் மற்றும் தாளாளர்


SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE
Accredited With "B+" Grade by NAAC
NAAC
"B+" GRADE